# அலகு 1
# கணக்கியல் அறிமுகம்

2 Marks

1. கணக்கியலை வரையறு.
    - கணக்கியக் என்பது பொருளாதார தகவல்களை கண்டறிந்து அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும்
    - இதன் மூலம் தகவல்களை பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவு எடுப்பதற்கும் வகை செய்கிறது - **அமெரிக்க கணக்கியல் கழகம்**
2. கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.
    - ❖ **அளவிடுதல்**
    - நிறுவனத்தின் செயல்திறனை அளவிடகணக்கியல் ஒரு கருவியாக செயல்படுகிறது
    - ❖ **முன்னறிதல்**
    - வணிக நிறுவனங்களின் எதிர்காலத்திறன் மற்றும் நிதி நிலைப்பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகள் மூலம் முன்கூட்டி அறிய முடிகிறது
3. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?
    - ❖ நடவடிக்கைகளை இனம் கட்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்
    - ❖ எடுத்தெழுதல் மற்றும் இருப்பு கட்டுதல்
    - ❖ இருப்பாய்வு தயாரித்தல்
    - ❖ வியாபார கணக்கு தயாரித்தல்
    - ❖ இலாபநட்ட கணக்கு தயாரித்தல்
    - ❖ இருப்பு நிலை குறிப்பு தயாரிதல்
4. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
    - ❖ **அகப்பயனீட்டாளர்கள்**
    - உரிமையாளர்கள்
    - மேலாண்மை/நிர்வாகம்
    - பணியாளர்கள்
    - ❖ **புறபயனீட்டாளர்கள்**
    - கடனீந்தோர் மற்றும் நிதி ந்றுவனங்கள்
    - முதலீட்டாளர்கள்
    - வாடிக்கையாளர்கள்
    - வரிகள் மற்றும் ஒழுங்கு முறை அமைப்புகள்

- அரசு
- ஆராய்ச்சியாளர்கள்
- பொதுமக்கள்

5. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.
   - ரொக்க அடிப்படை
   - நிகழ்வு அல்லது வணிக அடிப்படை
   - கலப்பு அல்லது கலப்பின அடிப்படை
6. நடவடிக்கை என்றால் என்ன?
   - பணம் அல்லது பண மதிப்பு ( சரக்குகள், சேவைகள், கருத்துகள்) ஒரு நபரிடம் இருந்து மற்றொருவருக்கு மாற்றம் செய்வதை குறிக்கும் ஒரு செயல்பாடு நடவடிக்கை ஆகும்

## 3 Marks

1) கணக்கியலின் பொருளை விளக்குக.

- கணக்கியக் என்பது பொருளாதார தகவல்களை கண்டறிந்து அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும்
- இதன் மூலம் தகவல்களை பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவு எடுப்பதற்கும் வகை செய்கிறது - **அமெரிக்க கணக்கியல் கழகம்**

2) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

1. நிதிநிலை கணக்கியல்
   - இது நிதியில நடவடிக்கைகளையும் நிகழ்வுகளையும் பதியக்கூடியது ஆகும்
2. அடக்க விலை கணக்கியல்
   - பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையை கணக்கிட உதவுகிறது
3. மேலாண்மை கணக்கியில்
   - கணக்கியல் தகவல்காளை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவெடுப்பதற்கும் நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வது மேலாண்மை கணக்கியல் ஆகும்.
4. சமூக பொறுப்பு கணக்கியல்
   - இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவது ஆகும்

5. மனித வள கணக்கியல்
   - இது ஒரு நிறுவனம் , அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றை குறிக்கும்

3) கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக

பின் வரும் பணிகள் மூலம் கணக்கியல் முக்கியத்துவம் பெறுகிறது

- முறையான பதிவேடுகள்
- நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்
- வளர்ச்சியை மதிப்பிடல்
- முடிவெடுத்தலுக்கு உதவுதல்
- சட்டத்தேவைகளை பூர்த்தி செய்தல்
- பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்
- சட்ட சான்றாக இருத்தல்
- வரி கணக்கிடுதல்
- இணைப்பின் போது தீர்வு செய்தல்

4) கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்? (அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. முதலீட்டாளர்கள்
- முதலீட்டு முடிவுகளை எடுப்பதற்கு
- நிறுவனத்தின் எதிர்கால இலாபம், இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை அறிய

ஆ. அரசு
- வணிகம் மற்றும் தொழில் துறை சார்ந்த கொள்கை முடிவுகள் உருவாக்க மற்றும் எடுக்க
- அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்ய
- சில பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய

5) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.

1. ஏடுகளை பராமரிப்பவர்
   - நிதி சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளை பராமரிக்கிறார்
2. நிர்வாகத்திற்கு தகவல் தருபவர்
   - நிர்வாகத்திற்கு தேவையான் நிதி சார்ந்த தவல்களை கணக்காளர் அளித்து உதவுகிறார்

3. வணிக சொத்துகளின் காப்பாளர்
    - ❖ சொத்துகளுக்கான பதிவேடுகளை பதிவு செய்து பராமரிப்பதன் மூலம் வணிக சொத்துகளின் காப்பாளாராக செயல்படுகிறார்
4. நிதி ஆலோசகர்
    - ❖ நிதி சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து அலோசனைகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நிதி ஆலோசகராக செயல்படுகிறார்
5. வரி மேலாளர்
    - ❖ கணக்காளர் குறித்த காலத்தில் வருமான வரி விவரம் தயாரிப்பு செய்தல், தாக்கல் செய்தல் மற்றும் வருமான வரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்
6. பொது தொடர்பு அலுவலர்
    - ❖ கணக்காளர், தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் பகுப்பாய்வு செய்ய தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்

## அலகு 2

# கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு

### 2 MARKS

1. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு
    - ❖ கணக்கேடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலை ஆகும் - ஜெ. ஆர். பேட்லிபாய்
2. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?
    - ❖ கணக்கியல் கருத்துகள் என்பது பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்
    - ❖ பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணம் அல்லது சாரம்சம் கருத்து எனப் பொருள்படும்
3. வருவாய் தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க
    - ❖ ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் , அச்சொத்துகள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.
    - ❖ இதுவே வருவாய் தீர்வு கருத்தாகும்

4. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?
    - கணக்குகள் நேர்மையாக தயாரிக்கப்பட வேண்டும்
    - அனைத்து முக்கிய தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும்
5. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறு குறிப்பு வரைக.
    - ஒரு வாணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபம் ஈட்டும் என்ற எதிர்பார்ப்பில் நடத்தப்படுகிறது
    - இக்கண்ணோட்டத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன்

## 3 MARKS

1. பெருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?
   பொருத்துகை கருத்து பொருள் :
    - ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஈட்டிய வருவாய் , அவ்வருவாயை ஈட்டிய அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடுவது பொருத்துகை கருத்து ஆகும்
    - இது நிகழ்வு தீர்வு கருத்து மற்றும் கணக்கியல் கால கருத்தினை அடிப்படையாக கொண்டவையாகும்

   பின்பற்றுவதற்கான காரணங்கள் :
    - நிறுவனத்தின் உண்மையான இலாபம் அல்லது நட்டத்தினை அறிய
    - நிறுவனத்தின் எதிர்கால திட்டமிடலுக்கு
2. ‘பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்’ – விவரி.
    - பணமதிப்பீட்டு கருத்தின் படி எந்த நடவடிக்கைகளை பணத்தால் அளவிட முடியுமோ அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதிவு செய்யப்படும்
    - கணக்கியலின் அளவீட்டு அலகாக் ஒரு நாட்டின் நாணயம் அமைகிறது
    - பணம் சாராத நடவடிக்கைகள் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை
3. ‘ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்’ – இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.

- ❖ ஒரு வாணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபம் ஈட்டும் என்ற எதிர்பார்ப்பில் நடத்தப்படுகிறது
- ❖ இக்கண்ணோட்டத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன
- ❖ எதிர்காலத்தில் நிறுவனம் கலைக்கப்டும் என்ற தேவை எழுவதில்லை

4. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைவரைக.
    - ❖ பொதுக் கணக்காளர் மற்றும் கணக்களார்களின் நலனுக்காக வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளே கணக்கியல் தரநிலைகளாகும் - **கோஹ்லர்**
    - ❖ இரண்டு விதமான தர நிலைகள் உள்ளன
        1. பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள்
            - ❖ பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் பன்னாட்டு தரநிலை வாரியத்தால் வழங்கப்படுவதாகும்
        2. இந்தியாவின் கணக்கியல் தர நிலைகள்
            - ❖ இந்தியாவின் கணக்கியல் தர நிலைகள் இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடுப்படுகிறது

## அலகு 3 முதன்மை பதிவேடுகள்

1. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
- ➢ நிதி சார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள் ஆதார ஆவணங்கள் ஆகும்

2. கணக்கியல் சமன்பாடு என்றால் என்ன?
- ➢ நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், முதல் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பினை சமன்பாட்டு முறையில் வெளிப்படுத்துவது கணக்கியில் சமன்பாடு ஆகும்

3. பின்வருனவற்றிக்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
   (அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்.
   (ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்.
- ➢ அ. கடனீந்தோருக்கு செலுத்தியது ரூ 5,000
- ➢ ஆ. ரூ 5,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது

4. குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்பதன் பொருள் என்ன?
- ➢ குறிப்பேட்டு நடவடிக்கைகளை பதிவு செய்யும் முறையினை குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம்

5. சொத்து கணக்கு என்றால் என்ன?
- பணமதிப்புடைய எந்த ஒரு இயற்பொருள் அல்லது உரிமை சொத்து ஆகும்
- சொத்துகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு தனித்தனியாக காட்டப்படுகின்றன.

6. ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
   - தனிநபர் கணக்கு, சட்டமுறை ஆள்சார் கணக்கு, பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு என 3 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

7. பெயரளவு கணக்கிற்கான கணக்கியல் விதியைக் கூறுக.
   - செலவுகளும் நட்டங்களும் பற்று வை
   - வருமானங்களும் ஆதாயங்களும் வரவு வை

8. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
   1. **ஆள்சார் கணக்கு**
      - பெருபவர் கணக்கு பற்று
      - தருபவர் கணக்கு வரவு
   2. **சொத்துகணக்கு**
      - உள்வருவன பற்று
      - வெளிச்செல்வன வரவு
   3. **பெயரளவு கணக்கு**
   - செலவுகளும் நட்டங்களும் பற்று வை
   - வருமானங்களும் ஆதாயங்களும் வரவு வை

## 3 மதிப்பெண்கள்

1. ஆள்சார் கணக்கின் மூன்று வகைகளைக் கூறுக.
   - தனிநபர் கணக்கு –இது மனிதர்கள் சார்ந்த கணக்கு
   - சட்டமுறை கணக்கு - இது மனிதர்கள் இல்லாத சட்டத்தால் உருவாக்கப்படும் செயற்கை நபர்கள் சார்ந்த கணக்கு
   - பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு - இது இயற்கை அல்லது செயற்கை தன்மையுடைய நபரையே அல்லது குழுவையோ குறிக்கிறது

2. கணக்கு என்றால் என்ன? கணக்குகளை வகைப்படுத்தி, தகுந்த உதாரணங்களுடன் கூறுக.
   - கணக்கு என்பது கணக்கியியலில் அடையாளம் காண உதவும் ஒரு அடிப்படை அலகாகும்

- கணக்குகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது
  1. ஆள்சார் கணக்கு
     - முதல் ,இந்தியன் வங்கி ,ராம் நிறுவனம், சந்துரு
  2. சொத்துக் கணக்கு
     - கட்டிடம் , இயந்திரம் ,ரொக்கம் ,வங்கி இருப்பு
  3. பெயரளவு கணக்கு
     - வாடகை ,சம்பளம் ,கூலி

3. உரிமையாளர் ஆயுள்மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம், கணக்கியலில் எவ்வாறு பதியப்படுகிறது?
   - உரிமையாளர் ஆயுள்மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம், கணக்கியலில் எடுப்பாக கருதப்படுகிறது. எனவே எடுப்பு கணக்கு பற்று வைக்கப்படும்.
   - காரணம் தனி வணிகத்தில் உரிமையாளரும், நிறுவனமும் தனித்தன்மை ஒன்றாக கருதப்படுகிறது. எனவே உரிமையாளர் ஆயுள் மீது செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் எடுப்பாக கருதப்படுகிறது

4. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?
   1. **ஆள்சார் கணக்கு**
      - பெருபவர் கணக்கு பற்று
      - தருபவர் கணக்கு வரவு
   2. **சொத்துகணக்கு**
      - உள்வருவன பற்று
      - வெளிச்செல்வன வரவு
   3. **பெயரளவு கணக்கு**
   - செலவுகளும் நட்டங்களும் பற்று வை
   - வருமானங்களும் ஆதாயங்களும் வரவு வை

# அலகு 4 பேரேடு

1. பேரேடு என்றால் என்ன?
   ஒரு தொழிலின் அனைத்து நடவடிக்கைகளையும் வகைப்படுத்தி நிரந்தரமாக பதிவு செய்யும் ஏடு பேரேடு ஆகும் - எல்.சி- கிராப்பர்
2. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?
   குறிபேட்டிலும் ஏனைய துணை ஏடுகளிலும் பதிவாகியுள்ள நடவடிக்கைகளை பேரேட்டில் உள்ள உரிய கணக்குகளுக்கு மாற்றிப் பதிவு செய்யும் வழிமுறையே எடுத்தெழுதல் ஆகும்
3. பற்று இருப்பு என்றால் என்ன?
   பற்று பக்கத்தில் உள்ள மொத்தம், வரவு பக்கத்தில் உள்ள மொத்தத்தை விட அதிகமாக இருப்பின் அது பற்று இருப்பு எனப்படும்
4. வரவு இருப்பு என்றால் என்ன?
   வரவு பக்கத்தில் உள்ள மொத்தம், பற்று பக்கத்தில் உள்ள மொத்தத்தை விட அதிகமாக இருப்பின் அது வரவு இருப்பு எனப்படும்
5. கணக்கை இருப்புக் கட்டுதல் என்றால் என்ன?
   இருப்புகட்டுதல் என்பது இரண்டு பக்கங்களின் தொகை பத்தியிலுள்ள மொத்த தொகைகளின் வேற்றுமைத்தொகையினை குறைவான மொத்த தொகை கொண்ட பக்கத்தில் எழுதுவது ஆகும்

3 மதிப்பெண்

1. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| வ.எண் | அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|---|
| 1 | ஏடு | இது ஒரு முதன்மை பதிவு ஏடு | இது ஒரு இன்றியமையாத கணக்கு ஏடு |
| 2 | நிலை | முதலில் பதிவு செய்வது | இரண்டாவதாக பதிவு செய்வது |
| 3 | பதிவு செய்யும் வரிசை | குறிப்பேட்டில் நடவடிக்கைகள் நிகழ்ந்த/நாளின் வரிசைப்படி | கணக்குகளின் வரிசைப்படி |
| 4 | வழிமுறை | குறிப்பேட்டில் பதிவு செய்வதை பதிவு செய்தல் ஆகும் | பேரேட்டில் பதிவு செய்தல் எடுத்தெழுதல் ஆகும் |

| | | | |
|---|---|---|---|
| 5 | வரி விதிப்பு | வரி விதிப்பு அதிகாரிகள் இவற்றை நம்பியிருப்பதில்லை | வரி விதிப்பிற்கு பேரேட்டு கணக்குகளையே பயன்படுத்துகிறார்கள் |

2. பேரேடு என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை?
   பேரேடு:
   ஒரு தொழிலின் அனைத்து நடவடிக்கைகளையும் வகைப்படுத்தி நிரந்தரமாக பதிவு செய்யும் ஏடு பேரேடு ஆகும் - எல்.சி- கிராப்பர்
   பயன்கள்
   1. ஒரு குறிபிபிட்ட கணக்கை பற்றிய தகவல்களை உடனடியாக பெறமுடிகிறது
   2. வணிக நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும்
   3. இருப்பாய்வு தாயாரிக்க முடியும்
   4. நிதி நிலை அறிக்கைகளை தயாரிக்க உதவுகிறது

## அலகு 5 இருப்பாய்வு

1. இருப்பாய்வு என்றால் என்ன?
   பேரேட்டு கணக்கிலுள்ள பற்று இருப்புகளையும், மற்றும் வரவு இருப்புகளையும் கொண்டு கணக்கீட்டு சரித்தன்மையை பரிசோதிக்க தயாரிக்கப்படும் ஒர் அறிக்கை இருப்பாய்வு ஆகும் - ஜே. ஆர். பேட்லிபாய்

2. இருப்பாய்வின் படிவம் தருக

--------------------------- ஆம் நாளைய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் விவரம் | பே.ப.எண் | பற்று இருப்பு ரூ | வரவு இருப்பு ரூ |
|---|---|---|---|---|
| | | | | |

3. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?
   1. இருப்பு முறை
   2. மொத்த தொகை முறை
   3. மொத்த தொகை மற்றும் இருப்பு முறை

## அலகு 6 துணை ஏடுகள் 1

1. ஏதேனும் நான்கு துணைஏடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.
    - ரொக்க ஏடு
    - கொள்முதல் ஏடு
    - கொள்முதல் திருப்ப ஏடு
    - விற்பனை ஏடு
    - விற்பனை திருப்ப ஏடு
2. கொள்முதல் ஏடு என்றால் என்ன?
    - இது ஒரு துணை ஏடு ஆகும்
    - கடனுக்கு வாங்கிய சரக்குகள் மட்டும் பதியப்படும்
    - ரொக்கத்திற்கு வாங்கிய சரக்குகள் இடம் பெறாது
3. கொள்முதல் திருப்ப ஏடு என்றால் என்ன?
    - ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகளை ரொக்கம் உடனடியாக பெறாமல் சரக்கு அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும் நடவடிக்கைகளின் பதிவு கொள்முதல் திருப்ப ஏடு ஆகும்
4. விற்பனை ஏடு என்றால் என்ன?

- இது ஒரு துணை ஏடு ஆகும்
- கடனுக்கு விற்ற சரக்குகள் மட்டும் பதியப்படும்
- ரொக்கத்திற்கு விற்ற சரக்குகள் இடம் பெறாது

5. விற்பனைத் திருப்ப ஏடு என்றால் என்ன?

   ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சரக்குகளை ரொக்கம் உடனடியாக செலுத்தாமல் சரக்கு பெற்றவரால் திருப்பி அனுப்பப்படும் நடவடிக்கைகளின் பதிவு விற்பனை திருப்ப ஏடு ஆகும்
6. பற்றுக்குறிப்பு என்றால் என்ன?
    - பற்று குறிப்பு என்பது ஓர் ஆவணம்
    - சரக்கை திருப்பி அனுப்பும் போது தயாரிக்கப்படும் ஒரு அறிக்கை ஆகும்
    - இதன் மூலம் சரக்கீந்தோரின் கணக்கில் பற்று செய்யப்படும் தொகை குறித்து தொரிவிக்கப்படும்

7. வரவு குறிப்பு என்றால் என்ன?
    - வரவுக்குறிப்பு விற்பனையாளரால் தயார் செய்து பொருளை வாங்குபவருக்கு திரும்ப பெறும் போது அளிக்கப்படும் அறிக்கை ஆகும்
8. உரிய குறிப்பேடு என்றால் என்ன?
   துணை ஏடுகளில் பதிவு செய்ய முடியாத பதிவுகளை பதிவு செய்யும் ஏடு உரிய குறிப்பேடு ஆகும்
9. மாற்றுச் சீட்டின் வரைவிலக்கணம் தருக.
   மாற்றுச்சீட்டு என்பது குறிப்பிட்ட நபருக்கோ அவரது ஆணைக்கேற்பவோ அல்லது அந்த ஆவணத்தை கொண்டு வருபவருக்கோ குறிப்பிட்ட பணத்தை செலுத்துமாறு குறிப்பிட்ட நபருக்கு ஒருவர் எந்த வித நிபந்தனையும் இல்லாமல் எழுத்து மூலமாக கையொப்பமிட்டு விடுக்கும் ஆணைத் தாங்கிய ஆவணமாகும் - மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881
10. தொடக்கப்பதிவு என்றால் என்ன?
   முந்தைய ஆண்டுகளின் பொறுப்புகள், சொத்துகள் மற்றும் முதலினை கணக்கில் கொண்டு வருவதற்காக பதியப்படும் பதிவுகள் தொடக்க பதிவுகள் ஆகும்
11. இடாப்பு என்றால் என்ன?
    - இடாப்பு என்பது சரக்கு விற்பனையாளரால் சரக்கை வாங்குபவருக்கு அளிக்கப்படும் அறிக்கை ஆகும்
    - இதில் பொருட்கள் அல்லது சேவைகள் பற்றிய விவரம், அதன் மதிப்பு போன்றவை குறிப்பிடப்பட்டிருக்கும்
12. சிறு குறிப்பு வரைக

   (அ) மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்
    - மாற்று சீட்டின் உரிமையை வேறொருக்கு மாற்றித்தருவதற்காக மாற்றுச்சீட்டின் முகப்பில் அல்லது பின்புறத்தில் கையொப்பம் இடுவது மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல் ஆகும்.

   (ஆ) மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்
    - மாற்றுச்சீட்டை வைத்திருப்பவர், அச்சீட்டு முதிர்வடையும் முன்னரே பணம் பெற விரும்பினால் அதனை வங்கியில் தள்ளுபடி செய்தூடனடியாக பணம் பெறுவது மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் எனப்படும்

## அலகு 7 துணை ஏடுகள் 2

1. ரொக்க ஏடு என்றால் என்ன?
   - ரொக்க ஏடு என்பது ரொக்க நடவடிக்கைகளை மட்டும் நாள் வரிசைப்படி பதியக்கூடிய ஏடாகும்
2. ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?
   - தனிப்பத்தி ரொக்க ஏடு
   - இருப்பத்தி ரொக்க ஏடு(தள்ளுபடி ரொக்கம் பத்திகள்)
   - முப்பத்தி ரொக்க ஏடு(தள்ளுபடி ரொக்கம், வங்கி பத்திகள்)
   - சில்லறை ரொக்க ஏடு
3. சாதாரண ரொக்க ஏடு /தனிப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

- ஒரு பேரெட்டு கணக்கைப் போன்று ஒவ்வொரு பக்கத்திலும் தொகைக்கான பத்தி ஒன்றை கொண்டிருக்கும்
- ரொக்க நடவடிக்கைகள் மட்டும் பதியப்படும்
- ரொக்க பெறுதல்கள் பற்று பகுதியிலும், ரொக்க செலுத்துதல்கள் வரவு பகுதியிலும் பதியப்படும்

4. தனிப்பத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

ப தனிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ. எ. | பே. ப. எ. | தொகை ` | நாள் | செலுத்தல்கள் | சா. சீ. எ. | பே. ப. எ. | தொகை ` |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | | | | | | | | |

5. இருபத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

- ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு ஆகும்
- ரொக்கம் மற்றும் தள்ளுபடி என்ற இரு பத்திகள் இரண்டு பக்கங்களிலும் கொண்டுள்ளதால் இவை இரு பத்தி ரொக்க ஏடு ஆகும்

6. இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக.

ப ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இ. எ. | பே. ப. எ. | தொகை ` | | நாள் | செலுத்தல்கள் | சா. சீ. எ. | பே. ப. எ. | தொகை ` | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தள்ளுபடி | ரொக்கம் | | | | | தள்ளுபடி | ரொக்கம் |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

7. முப்பத்தி ரொக்க ஏடு என்றால் என்ன?

- ரொக்கம்,வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏடு ஆகும்
- ரொக்கம் ,வங்கி மற்றும் தள்ளுபடி என்ற மூன்று பத்திகள் இரண்டு பக்கங்களிலும் கொண்டுள்ளதால் இவை முப்பத்தி ரொக்க ஏடு ஆகும்

8. ரொக்கத் தள்ளுபடி என்றால் என்ன?

- குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன் வாடிக்கையாளரிடமிருந்து தொகையை பெறும் நோக்குடன் வியாபாரியால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் தள்ளுபடி ரொக்கத் தள்ளுபடி ஆகும்
- கணக்கேடுகளில் ரொக்கத்தள்ளுபடி தனியாக காட்டப்படும்

9. வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?

- விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தில் வாங்குபவருக்கு விற்பவரால் வழங்கப்படும் தள்ளுபடி வியாபார தள்ளுபடி ஆகும்
- வியாபார தள்ளுபடி இடாப்பில் விற்பனை மதிப்பிலிருந்து கழித்து காண்பிக்கப்படும்

10. சில்லறை ரொக்க ஏடு என்றால் என்ன?

- சில்லறை ரொக்க ஏடு என்பது அடிக்கடி நிகழக்கூடிய சிறு செலவினங்களான வண்டிச்சத்தம், கூலி போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடு ஆகும்
- சில்லறை காசாளர் சில்லறை ரொக்க ஏட்டினை பராமரிக்கிறார்

3 marks

11. சில்லறை ரொக்க ஏட்டில் முன் பண மீட்பு முறையின் பொருளை விளக்குக.

- குறிப்பிடப்பட்ட காலத்தில் செலவழிக்கப்பட்ட தொகையை சில்லறை காசாளர் திரும்ப பெறும் முறை முன் பண மீட்பு முறை ஆகும்

12. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ.எண் | ரொக்கத்தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|
| நோக்கம் | தொகையை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திருப்பெறுதல் | விற்பனையை அதிகரித்தல் |
| வழங்கப்படும் காலம் | தொகையை திரும்ப பெறும் பொழுது | பொருட்களை விற்கும் போது |
| இடாப்பு | இடாப்பில் இடம் பெறாது | இடாப்பில் விற்பனை மதிப்பிலிருந்து கழித்து காண்பிக்கப்படும் |

13. சில்லறை ரொக்க ஏடு பராமரிப்பதால் உண்டாகும் நன்மைகளை எழுதுக.

- செலவினங்களை நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும்
- முதன்மை காசாளரின் நேரம் மிச்சப்படுகிறது
- சிறு செலவினங்களால் ரொக்க ஏட்டில் அதிக சுமை இல்லாமல் இருக்கும்
- பேரேட்டில் எடுத்தெழுவது எளிமையாகிறது

14. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.

- ஒரு பதிவு ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு இரண்டையும் பாதித்தால் அது எதிர் பதிவு ஆகும்
- எதிர்பதிவின் போது ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவு தன்மைகள் ரொக்க ஏட்டிலேயே பதியப்படுகின்றன்
- உதாரணம்

அ. வங்கியில் செலுத்தியது ரூ 10,000

ஆ. வங்கியிலிருந்து எடுத்தது ரூ 15,000

## அலகு 8 வங்கிச் சரிகட்டும் பட்டியல்

### 2 மதிப்பெண்கள்

1. வங்கி மேல்வரைப்பற்று என்றால் என்ன?
    - வங்கி கணக்கில் உண்மையான இருப்புக்கு மேல் எடுப்பு செய்யும் போது காண்பிக்கும் இருப்பு வங்கி மேல்வரை பற்று ஆகும்
    - அதிகப்படியாக எடுத்த தொகைக்கு பயன்படுத்திய நாள் வரை மட்டும் வட்டி கணக்கிடப்படுகிறது
2. வங்கிச் சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?
    - வங்கி சரிகட்டும் பட்டியல் என்பது ரொக்க ஏட்டின் வங்கி இருப்புக்கும் செல்லேட்டின் வங்கி இருப்புக்கும் உள்ள வேறுபாட்டு இனங்களை வரிசைப்படுத்தும் ஒரு அறிக்கை ஆகும்
3. ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும் வங்கி அறிக்கைக்கும் இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களில் ஏதேனும் இரண்டை கூறுக
    - கால இடைவெளை வேறுபாடு - ஒரே மாதிரியான இனங்களை பல்வேறு காலக்கட்டங்களில் பதிவு செய்வது
    - பதிவு செய்வதில் ஏற்படும் தவறுகள் - தவறாக பதிவு செய்வதால் ஏற்படும் வேறுபாடுகள்
4. நிலை அறிவுறுத்தலின்படி வங்கியால் செலுத்தப்பெறும் ஏதேனும் இரண்டு செலவுகளை தருக
    - வங்கி செலுத்திய காப்பீடு முனைமம்
    - வங்கி செலுத்திய தவணை தொகை
    - வங்கி செலுத்திய தொலைப்பேசி கட்டணம்
5. கீழ்கண்ட வாக்கியத்திற்கு ஒரு வார்த்தையில் விடை தருக

    (அ) வங்கியால் அளிக்கப்படும் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
    - வங்கி அறிக்கை

    (ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு

- வங்கி மேல்வரை பற்று

  (இ) ரொக்க ஏட்டின் படி இருப்பு மற்றும் வங்கி அறிக்கையின் படி இருப்பு வேறுபடுவதற்கான காரணங்களை பட்டியலிடும் அறிக்கை

- வங்கி சரிகட்டும் பட்டியல்

6. பின்வரும் வாக்கியங்களங்களை ஏற்றுக்கொள்கிறாறாயா? ஏற்றுக் கொண்டால் ‘ஆம்’ எனவும், ஏற்றுக்கொள்ளாவிட்டால் ‘இல்லை’ எனவும் பதிலளிக்கவும்

   (அ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் வங்கியரால் தயாரிக்கப்படுகிறது

- இல்லை

  (ஆ) வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கு முன்னர் ரொக்க ஏட்டினை சரிகட்டுவது கட்டாயமானது.

- இல்லை

  (இ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு என்பது மேல்வரைப்பற்றாகும்

- இல்லை

  (ஈ) வங்கியால் பற்று செய்யப்படும் வங்கிக் கட்டணம் வங்கி அறிக்கையின் படியான இருப்பினை அதிகரிக்கச் செய்யும்.

- இல்லை

  (உ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும் ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்திக்கும் இடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிய தயாரிக்கப்படுவதே வங்கி சரிக்கட்டும் பட்டியல் ஆகும்

- இல்லை

3 மதிப்பெண்கள்

7. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக
   - காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் கால தாமதத்தை கண்டறிதல்
   - ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிடல்
   - வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுத்தல்
8. காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தவில்லை' என்பதன் பொருள் என்ன?
   - காசோலை வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற பின்பு அதே நாளில் வங்கியில் செலுத்தப்படாமல் வேறு ஒரு நாளில் வங்கியில் செலுத்துவது காசோலை இன்னும் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாகும்
9. வங்கியில் ரொக்க செலுத்தும்போது ரொக்க ஏட்டில் பற்றும் வங்கி அறிக்கையில் வரவும் வைக்கப்படுவது ஏன்? விளக்குக
   - வங்கியில் செலுத்தும் ரொக்கம் வணிகரின் பார்வையில் சொத்து, எனவே ரொக்க ஏட்டில் வங்கி பத்தியில் பற்று வைக்கிறோம்
   - மேலும் ரொக்க ஏட்டினை பராமரிப்பது வணிகர் ஆவார்
   - வங்கியில் செலுத்தும் ரொக்கம் வங்கியின் பார்வையில் பொறுப்பு, எனவே வங்கி நமது கணக்கில் வரவு வைக்கிறது
   - மேலும் நமது வங்கி கணக்கை பராமரித்து வங்கி அறிக்கையாக அளிப்பவர் வங்கியர் ஆவார்
10. மேல்வரைப்பற்று இருப்பாக இருந்தால் வங்கி வசூலித்த வட்டி ஏற்படுத்தும் விளைவு என்ன?
    - மேல்வரைப்பற்று இருப்பாக இருந்தால் வங்கி வசூலித்த வட்டி ஏற்படுத்தும் விளைவு **மேல்வரைப்பற்று தொகை குறையும்**

11. வங்கிச் சரிகட்டும் பட்டியலில் கால இடைவெளிகளால் ஏற்படும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுடன் தருக.
    - கால இடைவெளை வேறுபாடு - ஒரே மாதிரியான இனங்களை பல்வேறு காலக்கட்டங்களில் பதிவு செய்வது
    - உதாரணம்:
        1. விடுத்த காசோலை வங்கியில் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
        2. வங்கியில் வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது
        3. வங்கி வசூல் செய்த வட்டி மற்றும் பங்காதாயம்
        4. வாடிக்கையாளர் நமது கணக்கில் நேரடியாக செலுத்தியது

## அலகு 9 பிழைத் திருத்தம்

1. பிழைத் திருத்தம் என்றால் என்ன?

   உரிய கணக்குகளில் தகுந்த குறிப்பேட்டு பதிவுகளையோ(திருத்த பதிவுகள்) அல்லது விளக்க குறிப்பையோ எழுதி பிழைகளின் விளைவை குறைத்தலே பிழைத்திருத்தம் எனப்படும்

   அல்லது

   பிழைத்திருத்தம் என்பது பதியாமல் விட்ட பதிவை அல்லது சரியான பதிவை தற்பொழுது செய்தலும், தவறான பதிவிற்கு நேற்மாறான பதிவை செய்து அதை இரத்து செய்தலும் ஆகும்

2. விதிப்பிழை என்றால் என்ன?

   விதிகளை தெரியாமலோ அல்லது மீறியோ தவறாக பதிவு செய்வதால் ஏற்படும் பிழைகள் விதிப்பிழை எனப்படும்

3. பகுதி விடுபிழை என்றால் என்ன?

   நடவடிக்கையில் பற்று, வரவு தன்மைகளில் ஏதேனும் ஒரு தன்மையை மட்டும் உரிய கணக்கில் பதிய வைக்காமல் விட்டு விடுவதை பகுதி விடு பிழை எனப்படும்

4. முழு விடு பிழை என்றால் என்ன?

கணக்கேடுகளில் ஒரு நடவடிக்கை எழுதப்படாமல் போகுமாயின் அது முழு விடு பிழை ஆகும். இவை இருப்பாய்வில் வெளிப்படாது

5. ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?

- சில நேரங்களில் ஒரு சில கணக்குகளின் மிகைப்பற்றுகளும் குறை பற்றுகளும் மற்ற சில கணக்குகளின் மிகை வரவுகளும், குறை வரவுகளும் சமன் செய்யப்படும்
- இத்தகைய சூழலில் ஏற்படும் பிழைகளுக்கு ஈடு செய்பிழைகள் எனப்படும்

3 மதிப்பெண் வினாக்கள்

6. விதிப்பிழையைப் பற்றிய குறிப்பை எடுத்துக்காட்டுடன் எழுதவும்.

- விதிகளை தெரியாமலோ அல்லது மீறியோ தவறாக பதிவு செய்வதால் ஏற்படும் பிழைகள் விதிப்பிழை எனப்படும்
- இவை இருப்பாய்வில் வெளிப்படாது
- உதாரணம் - சொத்துகள் வாங்குதலை சொத்து கணக்கில் பதிவு செய்யாமல் கொள்முதல் ஏட்டில்/ கொள்முதல் கணக்கில் பதிவு செய்வது ஆகும்

7. அனாமத்துக் கணக்குப் பற்றிக் குறிப்பு எழுதவும்

- இறுதி கணக்குகள் தயாரிப்பதற்கு முன் பிழைகளை கண்டுப்பிடித்து சரி செய்ய முடியாத பொழுது வேற்றுமை தொகையை புதியதாய் தோற்றுவிக்கப்பட்ட கற்பனையான தற்காலிக கணக்குகளுக்கு மாற்றி பதியப்படும். அக்கணக்கு அநாமத்து கணக்கு எனப்படும்
- இதன் மூலம் இறுதி கணக்குகள் தயாரிப்பதற்கான கால தாமதம் தவிர்க்க முடிகிறது

8. இருப்பாய்வு வெளிப்படுத்தாத பிழைகள் யாவை?

| | |
|---|---|
| முழு விடு பிழை | பதிவு செய்தல் பிழைகள் |
| விதிப்பிழைகள் | ஈடு செய் பிழைகள் |
| தவறான கணக்கில் | |

| | |
|---|---|
| எடுத்தெழுதுதல் பிழைகள் | |

9. இருப்பாய்வு வெளிக்காட்டும் பிழைகள் யாவை?

| | |
|---|---|
| பகுதி விடு பிழைகள் | கூட்டல் பிழைகள் |
| இருப்பு கூட்டல் பிழைகள் | தூக்கி எழுதுதல் பிழைகள |
| சரியான கணக்கில் தவறான பக்கத்தில் எடுத்தெழுதல் பிழைகள் | சரியான கணக்கில் தவறான தொகையை எடுத்தெழுதுதல் பிழைகள் |
| ஒரே கணக்கில் இரு முறை எடுத்தெழுதுதல் | |

## அலகு 10 தேய்மான கணக்கியில்

1. தேய்மானம் என்றால் என்ன?

   தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும் ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்

2. தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?
   - நேர்கோட்டு முறை
   - குறைந்து செல் இருப்பு முறை
   - ஆண்டுத்தொகை முறை
   - மறுமதிப்பீட்டு முறை
   - ஈடு நிதி முறை
   - காப்பீடு முனைம முறை
   - ஆண்டுகளின் இலக்கங்களின் கூட்டுத்தொகை முறை
   - இயந்திர மணி நேர வீத முறை

3. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிட உதவும் சூத்திரங்கள் யாவை?

$$\text{ஆண்டுத் தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்கவிலை} - \text{எதிர்நோக்கும் இறுதிமதிப்பு}}{\text{சொத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் (ஆண்டுகளில்)}}$$

$$\text{தேய்மான விகிதம்} = \frac{\text{ஆண்டு தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$$

4. ஆண்டுத் தொகை முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன?
   - ஆண்டுத்தொகை அட்டவணை கொண்டு தயாரிக்கப்ப்படுகிறது
   - தொடர்புடைய சொத்தில் முதலீடு செய்யாமல் வேறு ஏதாவது சொத்தில் முதலீடு செய்தால் பெறப்படும் வருவாயின் அடிப்படையில் தேய்மானம் நீக்கப்படுகிறது

5. தேய்மான நிதிமுறை என்றால் என்ன?
   - ஒவ்வொரு ஆண்டும் தேய்மானம் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையாக இருக்கும்
   - தேய்மான தொகை தேய்மான நிதி மூலமாக இலாப நட்ட கணக்கில் செலவாக பதியப்படுகிறது
   - தேய்மான தொகை குறிப்பிட்ட வட்டி வீதம் தரக்கூடிய பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது

## 3 மதிபெண் வினாக்கள்

6. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள்/ தேவைகள் யாவை?
   - ஒரு நிறுவனத்தின் சரியான இலாபம் நட்டத்தினை கண்டறிய தேய்மானம் நீக்கப்பட வேண்டும்
   - உண்மையான மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த தேய்மானம் நீக்கப்பட வேண்டும்
   - உண்மையான உற்பத்தி செலவினை கண்டறிய தேய்மானம் நீக்கப்பட வேண்டும்

- பழைய சொத்துகளுக்கு பதிலாக புதிய சொத்துகள் வாங்க தேய்மானம் நீக்கப்பட வேண்டும்
- சட்ட தேவைகளை பூர்த்தி செய்ய தேய்மானம் நீக்கப்பட வேண்டும்
- வருமான வரி சுமையை குறைக்க தேய்மானம் நீக்கப்பட வேண்டும்

7. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
    1. தேய்வு
       புலனாகும் சொத்துகளை தொடர்ந்து பயன்படுத்தும் போது தேய்மானம் ஏற்படுகிறது
    2. காலப்போக்கு
       காலப்போக்கு காரணமாக ஒரு சில சொத்துகள் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டாலும் அவற்றின் மதிப்பு குறையும்
    3. வழக்கொழிவு
       நவீன பதிலி சொத்துகள் வருகையால் சொத்துகளின் மதிப்பு குறையும்
    4. பராமரிப்பின்மை
       சொத்துகளை முறையாக பராமரிப்பு செய்யப்படாத போது தேய்மானம் ஏற்படுகிறது
8. நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?

   நன்மைகள்
    1. தேய்மான கணகீடுகளை புரிந்து கொள்வது எளிது\
    2. தேய்மான தொகை ஆண்டுதோறும் நிலையாக இருக்கும்
    3. சொத்தின் மதிப்பு முழுவதும் நீக்கப்படுகிறது
    4. நிலையான உழைப்பு காலத்தை பெற்றுள்ள சொத்துகளுக்கு பொருத்தமானது

   குறைபாடுகள்
    1. சொத்தின் உண்மை பயன்பாட்டினை எடுத்துக்கொள்வது இல்லை

2. வட்டி காரணியை எடுத்து கொள்வது இல்லை
3. சொத்தின் காலம் அதிகரிக்கும் போது சொத்தின் மீதான தேய்மானம் அதிகமாக உள்ளது
4. இறுதி மதிப்பை தீர்மானிப்பது கடினம்

9. குறைந்து செல் மதிப்பு முறையின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளைக் கூறவும்.

நன்மைகள்

- வருமானத்தின் மீது சீரான தாக்கம் உள்ளது
- செயல் காரண தொடர்புடைய முறை

குறைபாடுகள்

- சொத்துகள் முழுமையாக போக்கு எழுதபடுவதில்லை
- வட்டி காரணியை எடுத்து கொள்வதில்லை
- தேய்மானம் கணக்கிடுவது சிரமம்
- சொத்தின் உண்மையான பயன்பாட்டினை எடுத்துக்கொள்வது இல்லை

10. தேய்மானம் கணக்கிடுதலில் நேர்க்கோட்டு முறை, குறைந்து செல் மதிப்பு முறை இடையே உள்ள வேறுபாடுகளை பட்டியலிடுக.

| நேர்கோட்டு முறை | குறைந்து செல் மதிப்பு முறை |
|---|---|
| சொத்தின் மொத்த அடக்க விலை மீது தேய்மானம் கணக்கிடப்படும் | ஆண்டின் தொடக்க மதிப்பு மீது தேய்மானம் கணக்கிடப்படும் |
| தேய்மானத்தொகை மாறாது | ஆண்டுதோரும் மாறும் |
| தேய்மானம் தொகை காண சொத்தின் இறுதி மதிப்பு தேவை | இறுதி மதிப்பு தேவை இல்லை |

## அலகு 11

# முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்

1. வருவாயினச் செலவு என்றால் என்ன?
   - நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கு வழங்கும் தொகை வருவாயின செலவுகள் ஆகும்
   - இது தொடர் தன்மை கொண்டது ஆகும்
2. முதலினச் செலவு என்றால் என்ன?
   - ஒரு கணக்காண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவின் பயனாது எதிர்வரும் ஆண்டுகளுக்கும் தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு முதலின செலவாகும்.
   - இது ஒரு தொடரா செலவினம் ஆகும்
3. முதலின வரவு என்றால் என்ன?
   - வருவாயினத்தை சாராத அனைத்து வரவுகளும் முதலின வரவுகள் ஆகும்
   - திரும்ப திரும்ப நிகழா தன்மையுடையது
4. வருவாயின வரவு பற்றி சிறு குறிப்பு தரவும்.
   - வணிகத்தின் வழக்கமான நடைமுறைகளிலிருந்து பெறக்கூடிய வருமானங்கள் வருவாயின் வரவுகள் ஆகும்
   - இது தொடர் தன்மை கொண்டது ஆகும்

5. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?

   நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயின தன்மையுள்ள ஒரு செலவின் பயன் எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால் அச்செலவு நீள்பயன் வருவாயின செலவு ஆகும்

3 மதிப்பெண் வினாக்கள்

6. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின செலவு | வருவாயின செலவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாது | அடிக்கடி நிகழும் |
| 2 | நோக்கம் | வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்தல் | வணிகத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது |
| 3 | பயன்பெறும் காலம் | நீண்ட காலம் | நடப்பு ஆண்டு மட்டும் |
| 4 | மாற்றுதல் | ரொக்கமாக மாற்ற முடியும் | ரொக்கமாக மாற்ற முடியாது |

7. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாது | அடிக்கடி நிகழும் |
| 2 | தொகையின் அளவு | பெரும்பாலும் பேரளவு தொகை | சிறிய அளவிலான தொகை |
| 3 | பகிர்வு | இலாபமாக கருதி பகிர்ந்து அளிக்க முடியாது | வருவாயின் வரவுகள் வருவாயின செலவுகளை காட்டிலும் அதிகமாக இருக்கும் போது இலாபமாக கருதி பகிர்ந்து அளிக்கப்படும் |

8. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயின தன்மையுள்ள ஒரு செலவின் பயன் எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால் அச்செலவு நீள்பயன் வருவாயின செலவு ஆகும்

உதாரணம் ; விளம்பர செலவு

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செலவு

## அலகு 12 தனி வணிகரின் இறுதி கணக்குகள் 1

1. வியாபாரக் கணக்கு பற்றி குறிப்பெழுதுக.
   - வியாபார கணக்கு என்பது கணக்காண்டிற்குரிய சரக்குகள் விற்றல் மற்றும் வாங்குதலின் முடிவை காட்டும் ஒரு பெயரளவு கணக்காகும்
   - நிர்வாக செலவுகள் இடம்பெறாது
2. பயன் தீரும் சொத்துகள் என்றால் என்ன?
   - இவ்வகையான சொத்துகள் தோண்டியெடுக்கும் செயல் முறையில் தன் மதிப்பை படிப்படியாக இழக்கின்றன.
   - உதாரனம் : **சுரங்கங்கள்., கற்சுரங்கங்கள்**
3. நிலைச் சொத்துகள் என்றால் என்ன?
   - வணிகத்தின் பயன்படுத்துவதற்காக வாங்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட சொத்துகள் நிலைச்சொத்துகள் ஆகும்
   - இவை பல வருடங்களுக்கு பயன் தர கூடியவை ஆகும்
4. கொள்முதல் திருப்பம் என்றால் என்ன?
   கொள்முதல் செய்யப்பட்ட சரக்கு சரக்களித்தோருக்கு திருப்பப்பட்டால் அவை கொள்முதல் திருப்பம் அல்லது வெளி திருப்பம் ஆகும்
5. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைறைமுகச் செலவுகளை குறிப்பிடுக
   நேரடி செலவுகள்
   - **கூலி**
   - **உள்தூக்கு கூலி**

   மறைமுக செலவுகள்
   - சம்பளம்
   - காப்பீடு முனைமம்

6. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக் குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் இரண்டு வேற்றுமைகளை எழுதுக

| அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைக்குறிப்பு |
|---|---|---|
| நோக்கம் | கணக்கியல் பதிவுகளின் கணக்கீட்டு சரித்தன்மையை பரிசோதிக்க | வணிகத்தின் நிதி நிலை அறிந்து கொள்ள |
| நிலை | இறுதி கணக்குகள் தயாரிக்கும் முன் | இருப்பாய்வு மற்றும் வியாபார இலாப நட்ட கணக்கு தயாரித்த பின்னர் தயாரிக்கப்படுகிறது |

7. வியாபாரக் கணக்கு தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?
   - மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம் கண்டறிய
   - நேரடி செலவுகள் மற்றும் நேரடி வருமானங்களை பற்றி அறிய
   - வரக்கூடிய நட்டங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது
8. இலாப நட்டக் கணக்கு தயாரித்தலின் தேவை என்னன்ன?
   - நிகர இலாபம் அல்லது நட்டம் கண்டறிய
   - இலாபத்தை முந்தைய ஆண்டுகளோடு ஒப்பீடு செய்ய
   - செலவுகளை கட்டுப்படுத்த
   - இருப்பு நிலை குறிப்பு தயாரிக்க உதவுகிறது

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

9. இறுதிக் கணக்குகள் என்றால் என்ன? அதன் பகுதிகள் யாவை?

   கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் கணக்குகள் இறுதி கணக்குகள் ஆகும்

   **பகுதிகள்**
   - வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு
   - இருப்பு நிலைக் குறிப்பு
10. இறுதிப் பதிவுகள் என்றால் என்ன? அவை ஏன் பதிவு செய்யப்படுகின்றன?
   - பெயரளவு கணக்கின் இருப்புகளை வியாபார இலாப நட்ட மற்றும் முதல் கணக்குகளுக்கு மாற்றம் செய்யும் பொருட்டு பதியப்படும் பதிவுகள் இறுதி பதிவுகள் ஆகும்

- வியாபார இலாப கணக்கினை தயாரிப்பதற்கும் அதன் மூலம் மொத்த இலாபம் அல்லது நட்டம், நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தினை கண்டறிய முடியும்

11. மொத்த இலாபம் மற்றும் நிகர இலாபம் என்றால் என்ன?
    - வியாபார கணக்கில் வரவு பக்கத்தின் கூடுதல் பற்று பக்கத்தின் கூடுதலை விட அதிகமாக இருந்தால் வேறுபாட்டு தொகை மொத்த இலாபம் ஆகும்
    - இலாப நாட்ட கணக்கில் வரவு பக்கத்தின் கூடுதல் பற்று பக்கத்தின் கூடுதலை விட அதிகமாக இருந்தால் வேறுபாட்டு தொகை நிகர இலாபம் ஆகும்
12. "இருப்பு நிலைக் குறிப்பு ஓர் கணக்கல்ல" – விளக்குக
    - இருப்புநிலை குறிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நாளில் வணிகத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகள் நிலை பற்றிய அறிக்கையாகும்
    - இவ்வறிக்கை வணிகத்தின் நிதிநிலையை உணர்த்துகிறது
    - இவ்வறிக்கை பேரேட்டு கணக்குகளின் இருப்பிலிருந்து தயாரிக்கப்படுகிறது
13. இருப்பு நிலைக் குறிப்பு தயாரித்தலின் நன்மைகள் யாவை?
    - வணிக சொத்துகளின் இயல்பு மற்றும் மதிப்பை அறிய
    - வணிகத்தின் மொத்த பொறுப்புகளை அறிய
    - உரிமையாளர்களின் பங்களிப்பு நிலையை அறிய
    - நிறுமத்தின் கடன் தீர்க்கும் சக்தியை கண்டறிய
14. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை குழுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குப்படுத்துதல் என்றால் என்ன?
    - குழுப்படுத்துதல் என்பது ஒரே தன்மையுடைய இனங்களை ஒரு பொதுவான தலைப்பின் கீழ் கொண்டு வருதலாகும்
    - ஒழுங்குப்படுத்துதல் என்பது பல்வேறு சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தகுந்த ஒழுங்கில் வரிசைப்படுத்துதலாகும்

## அலகு 13 தனியாள் வணிகரின் இறுதிக் கணக்குகள் – II

1. சரிக்கட்டுப் பதிவுகள் என்றால் என்ன?
   சரிகட்டுதல்களை கணக்கில் கொண்டு வருவதற்காக பதியப்படும் பதிவுகள் சரிகட்டு பதிவுகள் ஆகும்
2. கொடுபட வேண்டிய செலவு என்றால் என்ன?
   செலவுகள் ஏதேனும் கொடுபட வேண்டி இருப்பின் அவை கொடுபடவேண்டிய செலவுகள் ஆகும்
3. முன் கூட்டிச் செலுத்திய செலவு என்றால் என்ன?
   செலவுகள் ஏதேனும் முன்கூட்டி செலுத்தப்பட்டிருந்தால் அவை முன்கூட்டி செலுத்திய செலவுகள் ஆகும்
4. கூடியுள்ள வருமானம் என்றால் என்ன?
   கணக்காண்டிற்குறிய வருமானம் ஏதேனும் பெறப்படாமல் இருந்தால் அவை கூடியுள்ள வருமானம் எனப்படும்

5. கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு என்றால் என்ன?
   - திடமான கடனாளிகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் தொகையை திரும்ப செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு திடமான கடனாளிகள் மீது குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கி வைக்கப்படுகிறது
   - ஒதுக்கி வைக்கப்படும் தொகை கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு எனப்படும்

6. இறுதிக் கணக்குகள் தயாரிக்க வேண்டியதன் தேவை யாது?
   - ஒரு நிறுவனத்தின் நிதிச்செயல் திறனை அறிந்து கொள்ள
   - ஒரு நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ள
   - நிறுவனத்தின் மொத்த இலாபம் அல்லது நட்டம் கண்டறிய
   - நிறுவனத்தின் நிகர இலாபம் அல்லது நட்டத்தினை கண்டறிய
   - உரிமையாளரின் பங்கினை அறிய

7. வாரா ஐயக்கடன் ஒதுக்கு என்றால் என்ன? ஏன் அது உருவாக்கப்பட வேண்டும்?
    - எதிர்காலத்தில் வாராக்கடனால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய இலாபம் கணக்கிடுவதற்கு முன் உருவாக்கப்படும் ஒரு தொகை வாரா ஐயக்கடன் ஒதுக்கு ஆகும்
    - கடனாளிகளிடமிருந்து வர வேண்டிய தொகை பெறலாம் அல்லது பெறமுடியாமல் போகலாம்
    - கடந்த கால அனுபவத்தை கணக்கில் கொண்டு ஒதுக்கப்படுகிறது
8. இறுதிக் கணக்குகளில் இறுதிச் சரக்கிருப்பு எவ்வாறு மதிப்பிடப்படுகிறது என்பதை விளக்கவும்.
    - கணக்காண்டின் இறுதியில் விற்காமல் உள்ள சரக்கு இறுதி சரக்கிருப்பு ஆகும்
    - அடக்க விலை அல்லது சந்தை விலை இவற்றில் எது குறைவோ அந்த விலையில் மதிப்பிடப்படும்
9. முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீது வட்டி குறித்து சரிக்கட்டுப் பதிவுகள் தருக.

**முதல் மீது வட்டி**

| | பற்று | வரவு |
|---|---|---|
| முதல் மீது வட்டி க/கு 'ப' | ***** | |
| முதல் க/கு | | ****** |
| ( முதல் மீது வட்டி சரிகட்டப்பட்டது) | | |
| இலாபநாட்ட க/கு 'ப' | ****** | |
| முதல் மீது வட்டி க/கு | | ***** |
| (இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | |

**எடுப்புகள் மீது வட்டி**

| | பற்று | வரவு |
|---|---|---|
| முதல் க/கு 'ப' | ***** | |
| எடுப்பு மீது வட்டி க/கு | | ****** |
| (எடுப்பு மீது வட்டி சரிகட்டப்பட்டது) | | |
| எடுப்பு மீது வட்டி க/கு 'ப' | ****** | |
| இலாபநாட்ட க/கு | | ***** |
| (இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | |

10. வாராக்கடன், வாரா ஐயக்கடன் ஒதுக்கு மற்றும் கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு குறித்த கணக்கியல் செயல்பாடுகள்(accounting treatment) பற்றி விவரி.

**வாராக்கடன்**

- இலாப நட்ட கணக்கின் பற்று பக்கத்திலும்
- இருப்புநிலைகுறிப்பில் சொத்துகள் பக்கத்தில் கடனாளியிடமிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படும்

**வாரா ஐயக்கடன் ஒதுக்கு**

- இலாப நட்ட கணக்கின் பற்று பக்கத்திலும்
- இருப்புநிலைகுறிப்பில் சொத்துகள் பக்கத்தில் போக்கெழுத வேண்டிய வாராக்கடன் நீக்கப்பட்டப்பின் உள்ள கடனாளியிடமிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படும்

**கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு**

- இலாப நட்ட கணக்கின் பற்று பக்கத்திலும்
- இருப்புநிலைகுறிப்பில் சொத்துகள் பக்கத்தில் திடமான கடனாளியிடமிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படும்

## அலகு 14 கணினிமையக் கணக்கியல்

1. கணினி என்றால் என்ன?
    - கணினி என்பதை ஒரு மின்னணு சாதனம் ஆகும்
    - இது மூல தரவுகளை உள்ளீடாக ஏற்றுக்கொண்டு அவற்றை செயல்முறைப்படுத்தி, பயனுள்ள தகவல்களாக உருவாக்கி வெளியீடாக தரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது
2. கணினிமயக் கணக்கியல் முறை என்றால் என்ன?
   கணினிமயக் கணக்கியல் முறை என்பது கணினியை பயன்படுத்தி கணக்குகளை பராமரிக்கும் முறை ஆகும்.
3. வன்பொருள் என்றால் என்ன?
    - கணினியின் இயற்கூறுகளை உள்ளடக்கியது அதன் வன் பொருளாகும்
    - முழுமையான கணினி அமைப்பை உருவாக்குவதற்கான உள்ளீட்டு சாதங்கள் மற்றும் வெளியீட்டு சாதனங்களையும் வன்பொருள் கொண்டிருக்கும்
4. மென்பொருள் என்றால் என்ன?
   வன்பொருள் மற்றும் கணினி அமைப்பின் பயனளிக்கும் இடையே இடைமுகமாக அமையும் நிரல்களின் தொகுப்பு மென்பொருள் ஆகும்
5. கணக்கியல் மென்பொருள் என்றால் என்ன?
    - கணக்கியல் மென்பொருள் என்பது ஒரு கணினி நிரல் ஆகும்
    - இது நிறுவனத்தின் நிதி மாற்றங்களை பதிவு செய்து கணக்காளர்களுக்கும், கணக்கேடுகள் பராமரிப்பவருக்கும் தேவையான அறிக்கை அளித்து உதவுகிறது
6. ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.
    - TALLY
    - BUSY
    - MARG

7. ஆயத்த மென்பொருள்களுக்கான உதாரணங்களில் ஏதேனும் இரண்டைத் தரவும்
   - TALLY
   - BUSY
   - MARG
8. குறிமுறை(coding) என்றால் என்ன?
   - குறிமுறை என்பது ஒரு அடையாள குறி
   - பொதுவாக கணினி கணக்கியல் கணக்குகளை குறிமுறையாக்குதலை உள்ளடக்கியதாகும்
9. கணக்குகள் குழுப்படுத்துதல் என்றால் என்ன?
   பல்வேறு வகையான கணக்குகளை அவற்றின் பண்புகள் அடிப்படையில் ஒன்றாக இணைத்தல் கணக்குகள் குழுப்படுத்துதல் ஆகும்
10. மதியோட்டுக் குறிமுறை (mnemonic codes )என்றால் என்ன?
   மதியோட்ட குறி முறை என்பது எழுத்துக்கள் அல்லது சுருக்கங்கள் , ஒரு துண்டு தகவலை மனதிற்கொள்ள செய்ய அடையாளமாக கொண்டிருக்கும்.
11. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள்கள் யாவை?
   - ஆயத்த மென்பொருள்
   - திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்
   - உருவாக்கப்பட்ட மென்பொருள்
12. கணினிமையக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக
   - அதிகப்படியான நிறுவுதல் செலவு ஏற்படுகிறது
   - பணியாளர்களுக்கு பயற்சி செலவுகள் ஏற்படுகிறது
   - உடல் நலத்திற்கு இடையூறு ஏற்படுத்துகிறது
   - தகவல் திருட்டு ஏற்பட வாய்ப்பு உண்டு

13. பல்வேறு வகையான குறிமுறையாக்க முறைகளைக் குறிப்பிடு

**தொடர்ச்சியான குறி முறை**

- எண்கள் மற்றும் எழுத்துகள் அடுத்தடுத்து வரிசையாக ஒதுக்கப்படுவதாகும்

**தொகுப்பு குறிமுறை**

- ஒரு குறிப்பிட்ட பரப்பு எண்களை விரும்பிய அளவிலான துணைப் பரப்புகளாக பிரித்தெடுக்கப்படும்
- ஒவ்வொரு துணை பரப்பும் ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்

**மதியோட்ட குறிமுறை**

- மதியோட்ட குறி முறை என்பது எழுத்துக்கள் அல்லது சுருக்கங்கள் , ஒரு துண்டு தகவலை மனதிற்கொள்ள செய்ய அடையாளமாக கொண்டிருக்கும்

14. கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பல்வேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்

- கொள்முதல் அறிக்கை
- விற்பனை அறிக்கை
- நேரடி செலவுகள் அறிக்கை
- விற்பனை செலவுகள் அறிக்கை
- வியாபார இலாப நட்ட அறிக்கை
- இருப்பு நிலை குறிப்பு
- கடனாளிகள் அறிக்கை
- கடனீந்தோர் அறிக்கை

15. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

| உள்ளீடு சாதங்கள் | வெளியீட்டு சாதனங்கள் |
|---|---|
| விசைப்பலகை(key board) | திரையகம்(Monitor) |
| சுட்டி(mouse) | வரைவி Plotter |
| வருடி(scanner) | அச்சு பொறிகள் printers |
| கைரேகை வருடி(finger print scanner) | ஒலிபெருக்கிகள் Speakers |
| டிராக் பந்து(truck ball) | பல்லூடகப்பட வீழ்த்தி multimedia Projector |
| விழித்திரை வருடி(retinal scanner) | |
| ஒளிப் பேனா(light pen) | |
| ஒளி வழி எழுத்து படிப்பான்(optical character Reader - OCR) | |
| பட்டை குறியீடு(bar code) | |
| குரல் உள்ளீட்டு சாதனம்(voice input system) | |
| தொடு திரை(touch screen) | |
| விசை(Keyer) | |
| இலக்க வகை கேமரா (Digital camera) | |